# டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்



கல்வியாளர், அறிவியலாளர், தமிழறிஞர், கவிஞர், நூலாசிரியர் என்ற பன்முக ஆளுமையுடன் விளங்கிய அண்ணாபல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களை சென்னை - பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிய போது எடுத்த படம்.

வா.செ.குழந்தைசாமி அவர்களிடம் அவர் இறப்பதற்கு 20ஆண்டுகளுக்கு முன்பிருந்து அணுக்கமாகப் பழகும் வாய்ப்பும் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் என்று சமூகம், மொழி, வரலாறு, அறிவியல் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து உரையாடும் வாய்ப்பும் கிடைத்தது.

ஈரோடு புத்தகத் திருவிழா, ஆசிரியர் பாராட்டு விழா, பாரதி விழா என்று நாம் நடத்திய பல நிகழ்வுகளில் வா.செ.கு பங்கு கொண்டுள்ளார்.

அவரின் நூல்கள் சிலவற்றைத் திறனாய்வு செய்து உரையாற்றுவதற்கு நாமும் சென்னை நிகழ்வுகளுக்கு அவரால் அழைக்கப்பட்டோம்.

மக்கள் சிந்தனைப் பேரவையின்   ஆம் ஆண்டு  'பாரதி விருது' வா.செ.கு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

வா.செ.கு அவர்களிடமான தொடர்புபடுத்தும் பல சம்பவங்களை உள்ளடக்கி அவரின் நினைவு மலரில் விரிவான கட்டுரை எழுதியுள்ளோம்.